INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS
DOI: 10.34256/irjt2244s-22254

# சித்திரக் கவிகளில் வழிபாட்டு மரபுகள்

குு. திலகவதி [அ, *] இரா. சுப்பிரமணி [அ]

[அ] தமிழ்த்துறை, கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி, முத்தூர், தமிழ்நாடு, இந்தியா

# Worship Traditions in Pictorial Poetry

G. Thilagavathi [a, *], R. Subramani [a]

[a] Department of Tamil, Karuppannan Mariappan College, Muthur, 638105, Tamil Nadu, India

* Corresponding Author: 1234vathi@gmail.com

Received: 26.09.2022
Revised: 28-10-2022
Accepted: 01-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

Praying to a deity for the sake of devotion is called worship. Tolkappiyam, the oldest book of Tamil, beautifully demonstrates that the deity has always been given priority in Tamil society. Even today, when we start an activity, it is customary for the Tamil community to start worshipping the deities of their clans and the deities of their choice. Worship arises from the lifestyle of the worshippers. Faith in God arises on the basis of the kind of social system a society has created and the system in which it receives its external necessities of life, such as food, clothing, and books. Just as the deities worshipped differed, so did the methods of worship in various ways. This can be understood from the literature created during the respective periods. That the worship of God was the first act of any action is evidenced by the fact that whatever kind of literature it may be, it began with the prayer to God. The pictorial poems, which are highlighted as one of the four poets sung together with the richness of literature combining painting, mathematics, and musical skills, are often sung in praise of God. Although there are many varieties of pictorial poems, among them, the types of pictorial poems that are in the form of bandham (a type) are the vehicles of God and are written in a form of worship associated with a God, which enriches the cult tradition of the Tamil community. In this way, the study identifies the pictorial poems arranged in the categories of Naga Bandham, Peacock Bandham, Anna Bandham, Vel Bandham, Ratha Bandham, Sivalinga Bandham, Malai Bandham, and Kamala Bandham.

**Keywords:** Worship, Bandham, Tamil Community, Tolkappiyam

## முன்னுரை

“மனிதன் உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றிற்கு இயற்கையையே சார்ந்திருந்தான். இயற்கை மனிதனுக்கு உதவியதால் இயற்கையை வழிபட்ட மனிதன் பிற்பாடு முன்னோர்கள் தனக்கு உதவுவதாக எண்ணி வழிபட்டான்.பிறகு தனக்கு உதவிய கருவிகளை வழிபட்டான்.பிறகு இறந்தவர்களை நடுகல் வைத்து வழிபட்டான்.இதன் தொடர்ச்சியாக தேவதைகளை குல தெய்வங்களை வழிபட்டு பின் வந்த காலங்களில் ஒவ்வொரு குழுக்களுக்கும் என தனித்தனியாக தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டான். பெண்மையை பெரிதும் மதித்த பண்டைய கால மனிதன் ஒரு சமூகத்தின் சிறந்த அடையாளமாகக் கருதி கன்னி தெய்வங்களை வணங்கினான்.எந்த செயலையும் தொடங்குவதற்கு முன்னதாக கடவுளை வணங்குதல் என்பதை மரபாகவே கடைபிடிக்கத் தொடங்கினான்.

## தொல்காப்பியச் சான்று

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னதாகவே கடவுள் வழிபாடு செய்திருக்கிறார்கள் என்பதை தொல்காப்பியத்தின் பல நூற்பாக்கள் சுட்டுகின்றன.ஒரு தெய்வத்தை பக்தியின் பொருட்டு வணங்குதல் வழிபாடு எனப்படுகிறது.

“வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப் பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து பொலிமின்” வழிபடும் தெய்வம் துணை நின்று காக்கும் என்பதில் வழிபாட்டிற்கு நம் முன்னோர்கள் அளித்த முக்கியத்துவத்தை அறிய முடிகிறது. அதோடு ஒவ்வொரு நிலத்திற்கும் தலைத் தெய்வ வழிபாடு இருந்ததை “மாயோன் மேய காடுறை உலகமும்,சேயோன் மேய மைவரை உலகமும்,வேந்தன் மேய தீம்புனல் உலகமும்,வருணன் மேய பெருமணல் உலகமும்,முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே” என்ற நூற்பா மூலம் அறிய இயலுகிறது (Ganesaiyar, 2010).

## சித்திரக்கவி

“ஆசு மதுரஞ்ச் சித்திரம் வித்தார மாகு நாற்கவி யறையுங் காலே” (Muthuveera Ubathiyar, 1889)

இதில் சித்திரக்கவி என்பது குறிப்பிட்ட ஓவியத்திற்குள் யாப்பு வழுவாமல் பாடல் இயற்றுவதாகும். சித்திரக்கவி அருங்கவி என அழைக்கப்படுவதிலிருந்து இதன் தனித்தன்மையை உணரலாம்.பொது நிலையில் சித்திரக்கவி எனும் போது சித்திரத்தில் அமைந்த கவிகள் என்றாலும் மாத்திரை அடிப்படை, எழுத்து அடிப்படை, சொல் அடிப்படை, சீர் அடி அடிப்படை, விடுகவி, வினாவிடை அடிப்படை, திறனறி அடிப்படை, குறிப்பு-வெளிப்படை அடிப்படை, ஓவிய வடிவில் பொருந்த அமைவன என்று பல்வேறு உட்கூறுகளைக் கொண்டுள்ளது.

## பந்தங்கள் வகை சித்திரக்கவி

பந்தங்கள் என்றால் கட்டுதல் என்று பொருள்.பந்தங்கள் வகை கவிகள் அனைத்துமே ஒரு குறிப்பிட்ட வகை ஓவியத்திற்குள் எழுதப்படும் கவிகளாகவே உள்ளன (Madhavan, 1983). இதில் இறைவனைப் போற்றிப் பாடும் வகையில் அமைக்கப்பெற்ற கவிகள் இறை சம்பந்தப்பட்ட பொருள்களின் வடிவங்களிலேயே அமைந்திருப்பது சிறப்பு. அன்ன பந்தம், நாகபந்தம், பதும பந்தம், முரச பந்தம், இரதபந்தம், கடகபந்தம், சிவலிங்க பந்தம், சங்கு பந்தம், சொக்கட்டான் பந்தம், திருக்கை பந்தம், திருவடி பந்தம், மயில் பந்தம், மலைபந்தம், மீன் பந்தம்,விருச்சிக பந்தம், விளக்கு பந்தம் என்று பந்தங்களின் வகைகள் விரிந்து கொண்டே செல்கின்றன .

## நாக பந்தம்

பொதுவாகவே நாகங்களை வணங்குவது தம் தமிழர் மரபு. அதோடு அவ்வடிவத்தில் இறைவனின் பெருமையையும் இணைத்து இயற்றுவது மிகவும் சிறப்பு.நாகங்கள் இறைவனோடு நெருங்கிய தொடர்பு கொண்டவையாகவே இருக்கின்றன. சிவபெருமானின் கழுத்திலும், திருமாலின் படுக்கையாகவும் இருந்து வழிபாட்டிற்கு உரியவையாகிறது. அதோடு புற்றுகள் தோறும் வழிபாடு செய்வது கிராமங்களில் பரவலாகக் காணப்படுவது. நாக பந்தம் என்பது நாகங்களின் தலையிலிருந்து வால் வரை செய்யுள் அடிகள் வருவது போலப் பாடுவது. இது ஏக நாக பந்தம், துவிநாக பந்தம், முந்நாக பந்தம், நானாகபந்தம், அட்ட நாக பந்தம் என பலவகைப்படும். ஒரே செய்யுளை ஒவ்வொரு நாகத்தின் தலையிலிருந்து வால் வரை படிப்பது போல் அமைப்பது ஒரு வகை.ஒவ்வொரு நாகத்திற்கும் தனித்தனி செய்யுள்கள் அமைப்பது என்பதும் ஒரு வகை. இதில் ஒவ்வொரு நாகத்திற்கும் தனித்தனியே அமைக்கும் வகையில் இயற்றுவது மிகவும் கடினமானதாகும். உதாரணப்பாடல்கள்:

 DOI: 10.34256/irjt224s-22254






பரிதிமார் கலைஞர் வாரியார் சுவாமிகள்

## கமலபந்தம் (தாமரை பந்தம்)

இறைவனுக்கு படைக்கும் பொருள்களில் சிறப்பிடம் பெறுவது மலர்கள். அம்மலர்களின் இதழ்களில் செய்யுளின் எழுத்துக்கள் வருமாறு அமைத்துப் பாடுவது கமலபந்தம். மாறனலங்காரமே முதலில் இவ்வகையை விளக்குகிறது. “எண்ணிரண் டிதழாய்க் கோணிரு நான்கின் கண்ணுற நடுவணப் பொகுட்டது காட்டிப் பண்ணமைப் பதுவும் பதும பந்தம்” (மாறனலங்காரம்,283)






பாம்பன் சுவாமிகள், முனைவர் பீ. ரஹமத் பீபி (Rehmat bibi, 2010).

## சடாக்கரபந்தம்

ஓம் எனும் சொல் மந்திரமாகப் போற்றப்படுவது.அதனையே அறு சக்கரத்திற்குள் அமையுமாறு பாடப்படுவது சடாக்கரபந்தம்.






முனைவர் பீ.ரஹமத் பீபி, திருபானந்த வாரியார் சுவாமிகள் (Rehmat bibi, 2010; Kirupanandha Variyar, 2015).

## வேல் பந்தம்

அறிவு, ஞானம், பொருள், இன்பம், திருவருள் முதலிய சொற்கள் வேலின் உருவத்தைக் குறிப்பனவாகும். முருகப்பெருமானுக்கே உரிய ஞானசக்தி வேலாயுதம். தன்னை ஏந்தியவர்க்கு நிச்சயம் வெற்றியைத் தருவதால் வெற்றி வேல் என சிறப்பிக்கப்படும் வேலாலே பாமாலை சூட்டி மகிழ்வது நம் தமிழ் மரபு. இதற்கு முருகப் பெருமானின் பக்தர்கள் இயற்றிய பாடல்களே உதாரணங்களாகின்றன.






வாரியார் சுவாமிகள் பாம்பன் சுவாமிகள்

## திருக்கை பந்தம்

ஒரு வட்டத்தின் நடுவே அமைந்த ஒரு கையில் எழுத்துக்கள் பொருந்தும்படி பாடுவது திருக்கை பந்தம்.

## திருவடி பந்தம்

ஒரு வட்டத்திற்குள் அமைந்த திருவடிகளில் எழுத்துக்கள் பொருந்தி அமையும்படி பாடுவது. இறைவனின் திருவடிகளிலும், திருக்கைகளிலும் பாவகைகளை இயற்றி இறைவனை போற்றிப் புகழ்வதாக அமைத்திருக்கின்றனர்.







திருக்கை பந்தம் திருவடி பந்தம்






சிவலிங்க பந்தம்

சிவலிங்க வடிவத்திலேயே இறைவனின் புகழ் பாடும் வகையில் இயற்றப்பட்ட செய்யுள்கள் சிறப்பிடம் பெறுகின்றது.



மயில் பந்தம்



சேவல் பந்தம்

முருகப் பெருமானின் வாகனமாகிய சேவலிலும்,மயிலிலும் செய்யுள்கள் இயற்றி வழிபடுகிறார் வாரியார் சுவாமிகள்.

## விளக்கு பந்தம்

தமிழ் கலாச்சாரத்தில் விளக்கு மங்கலப் பொருளாகும்.பலவகை விளக்குகளில் சித்திரக்கவிகள் இயற்றப் பட்டிருப்பினும் காமாட்சி அம்மன் விளக்கில் அம்மனையே பாடு பொருளாக அமைத்துப் பாடியிருப்பது நுட்பமான கலையாகும்.

 DOI: 10.34256/irjt224s-22254

### மாணிக்க மாலை பந்தம்

இறைவனுக்கு மாலை சாற்றி வழிபடுதல் என்பது மரபு. பாமாலையாய் பூ மாலை அமைத்து



விளக்கு பந்தம்



மாணிக்க மாலை பந்தம்

## வழிபடுதல் சிறப்பு

இது போன்று பல வடிவ அமைப்புகளில் செய்யுள்கள் இயற்றி அதனையே பாமாலைகளாக இறைவனுக்கு சாற்றும் வழிபாடாக வைத்திருக்கின்றனர்.மேலே குறிப்பிட்டிருக்கும் பாடல்கள் அனைத்தும் உதாரணங்கள் மட்டுமே.இதுபோல் பல வகையான செய்யுள்கள் தமிழைப் போற்றியும் சிலப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டும் இயற்றப்பட்டிருக்கின்றன.இதில் பெரும்பாலும் இறைவனின் துணை வேண்டி நிற்பதாகவே அமையும்.

### உதாரணமாக கடகபந்தம்

இறைவனுக்கு அணிவிக்கும் ஆபரணத்திலேயெ பாமாலைச் சூட்டி அருள் வேண்டி எழுதப்பட்டது கடகபந்தம்.





தோகை மயில் வாகனனே! குகனே! முருகா! எல்லாவற்றிர்கும் மூலமுதலே! கந்தனே! என் ஆசைத் துன்பங்கள் அனைத்தையும் எந்நாளும் உன்னையே பூசித்துவணங்குகிறேன். அழித்துக் காப்பாயாக! என்னைக் காத்தருள்க.

சித்திரக் கவிகளில் உள்ள மற்றொரு சிறப்பு செய்யுள் எழுதும் போது வரும் எழுத்துக்களின் எண்ணிக்கையை விட சித்திரத்தில் எழுதும் போது எண்ணிக்கை குறைவாக இருக்கும்.ஒவ்வொரு செய்யுள்களும் ஆழ்ந்த பொருள் பொதிந்தவையாகவும், கருத்து செறிவுடையனவாகவும் படைக்கப்பட்டிருக்கின்றன. எழுத்துக்களின் எண்ணிக்கை குறைவது என்பது சில எழுத்துக்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்களில் பொதுவாக நிற்பது.

## யாப்பு

இவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட யாப்பிலேயே அமக்கப்பட வேண்டும். நுண்ணிய அறிவுத்திறன் இருந்தால் ஒழிய இது போல் எழுதுவது அரிதாகும் சித்திரக் கவிகளுக்கு யாப்பமைதி மிகவும் இன்றியமையாததாகும். வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்னும் நால்வகைப் பாக்களும் அவற்றின் இனங்களும் புலவனின் திறமைக்கேற்றவாறு இச்சித்திரக்கவிகளில் அமையும்.சில நூல்களின் இறுதியில் நூலாசிரியர் தாம் பாடியுள்ள யாப்பு வகைகளைக் கணக்கிட்டுக் காட்டியிருப்பது அறியத்தக்கது. ”கந்தன் சித்திர பந்தனக் கவியிற் தந்த புறநடைசாற்ரக் கேண்மோ பாவகையைந்து பத்துங்குக்னாந் தேவனைத் தொழுது செய்ததுவாமே” என்ற பாடல் பாடல் சித்திரக் கவிகளுக்கான யாப்பு அடிப்படையை தெளிவு படுத்துவதோடு இவை அத்தணையும் இறைவனை தொழுது பாடப்படுபவைகளே என்றக் குறிப்பையும் காட்டுகிறது..

## முடிவுரை

சித்திரக் கவிகள் பெரும்பாலும் இறைவனை பாடுபொருளாகக் கொண்டே பாடப்பட்டிருக்கின்றன. ஆதலாலேயே இவை மிறைகவி என அழைக்கப்படுகின்றன. சித்திரக் கவிகளைப் பாடுவோர் மிகவும் புலமை வாய்ந்தவர்களாகவே உள்ளனர். சித்திரக் கவிகளுக்கான பட வடிவுகள் பெரும்பாலும் இறைவனின் வாகனங்களாகவும், படைகலங்களாகவுமே அமைக்கப் பெற்றிருக்கின்றன. இயற்கையிலேயே கலையுள்ளம் கொண்ட காவியப் புலவனே ஓவியக் கலைஞனுமாய் இருப்பின் தன் உள்ள வெளிப்பாட்டை எண்ணக் குவியல்கலைப் பொருத்தமான ஓவியங்களில் அமைத்து சிறப்புற அமைக்க முடியும் என்பதற்கு சித்திரக்கவிகளே சான்றாக அமைகின்றன. மொழிப்புலமையும் கற்பனைக் கண்ணோட்டமும் சேர்ந்து கண்களுக்கு விருந்தளிக்கும் இச்சித்திரக்கவிகளில் இறைவனை போற்றிப் பாடும் மரபினை பந்தங்கள் வகையில் அமைத்து பாடி பரவசமடைந்த முறைகள் இவ்வாய்வின் வழி கண்டறியப்பட்டது.தற்காலத்தில் சித்திரக் கவி எழுதுவோர் எண்ணிக்கை அருகி வரும் சூழலில் இதை மீட்டெடுக்கும் முயற்சியாக இது அமையும். கலையுண்ர்வும், கற்பனைத்திறனும், கணிதத்திறனும், கவிப்புலமையும் ஒருங்கே பெற்று அமைக்கப்படும் சித்திரக்கவி வழிபாட்டு மரபினை காத்தல் தமிழ் மொழிக்காற்றும் கடமையாகிறது.

## References


Ganesaiyar, (2010) Tholkappiyam Urai, International Institute of Tamil Studies, Chennai, India.

Kirupanandha Variyar, (2015) Sithirakavikal, Kuga Sri Variyar Pathippagam, Chennai, India

Madhavan, V.R. (1983) Sithirakavikal, International Institute of Tamil Studies, Chennai, India

Muthuveera Ubathiyar, (1889) Muthuveeriyam, Albinion Press, Madras, India

Rehmat bibi, (2010) Chithirai Solai, Mercury Printers & Publishers, Perambalur, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author(s) has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License